
# அப்போஸ்தலரின் நடபடிகள் ஊழியத்துக்கு வழிகாட்டுதல்கள்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் A1b யை வாசிக்கவும்

ஜெபம் : கர்த்தாவே, இயேசுவுக்கு சாட்சியாய் விளங்க, அப். 1:8 ல் நீர் வாக்களித்த பரிசுத்த ஆவியானவரின் பலத்தை எங்களுக்குத் தருவீராக

## 1. தேவ வார்த்தையால் உங்கள் இருதயத்தையும் மனதையும் யத்தப்படுத்துக

சுவிசேஷங்களில் ஒன்றை எழுதிய லூக்காவே, சபை எருசலேமில் எவ்வாறு தோன்றி, ரோம சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த யூதர்களிடமும் புறஜாதியாரிடமும் பரவி, ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா எங்கும் பரந்தது என்று அப்போஸ்தலர் நடபடிகளில் பதிவு செய்தார்.




அப்போஸ்தலர் 1 ஐ வாசிக்கவும். தேவ ராஜ்யத்தை விரிவாக்க தேவையான பலத்துக்கு ஆதாரத்தை வசனம் 1-8 ல் காண்க.

அப்போஸ்தலர் 1:8 ல், பரிசுத்த ஆவியின் வல்லமையால் இயேசுவை அறிவித்த நான்கு இடங்களைக் காண்க.

1) **எருசலேம்** என்பது நாம் வாழும் சமுதாயத்தைக் குறிக்கிறது. உங்கள் "எருசலேம்" எது?

2) **யூதேயா** என்பது அருகில் வாழும் ஒரே கலாச்சார மக்களைக் குறிக்கிறது. உங்கள் "யூதேயா" எங்கே இருக்கிறது?

3) **சமாரியா** என்பது அருகில் உள்ள ஒரே மாதிரியான கலாச்சார மக்களைக் குறிக்கிறது. உங்கள் "சமாரியாகள்" யார்?

4) **பூமியின் கடைசிபரியந்தம்** என்பது தொலை தூரத்திலுள்ள, புறக்கணிக்கப்பட்ட மக்களை குறிக்கிறது. நீங்கள் அங்கு சென்று சேர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

**அப்போஸ்தலர் 1:14** ல் இயேசு வாக்களித்த பரிசுத்த ஆவியானவருக்காகக் காத்துக் கொண்டிருந்த வேளையில் அப்போஸ்தலர்கள் என்னசெய்து கொண்டிருந்தனர்?

**அப் 2 ல் வாசிக்கவும்.** காத்துக் கொண்டிருந்த சீஷர்களை பரிசுத்த ஆவியானவர் நிரப்பிய போது நிகழ்ந்த சம்பவங்கள் என்ன? பரிசுத்த ஆவியானவர் அவர்களை எதற்காக அனுப்பினார். ஒரு உற்சாகமூட்டும் அனுபவத்திற்கா? அல்லது சாட்சி அளிக்கும்படி அவர்களுக்கு உதவவா?

- பேதுருவின் வல்லமையான பிரசங்கத்தில் இயேசுவின் மரணம் உள்ளிட்ட முக்கியமாக வலியுறுத்தப்பட்ட விஷயங்களை அப். 2:24-32 ல் காண்க.

- இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உடனடியாக விசுவாசிகள் செய்த ஏழு விஷயங்களை அப். 2:37-47 ல் காண்க.

**அப்போஸ்தலர் நடிபடிகளின் பிற அத்தியாயங்களில் காண்க:**

அத். 3: இயேசுவின் நாமத்தினால் கூப்பிடும்போது தேவன் செய்வார் என்று நாம் எதிர்பார்க்கக் கூடியவை என்ன?

அத். 4: எதிரான அதிகாரிகள் நம்மை மிரட்டும் போது நாம் என்ன செய்ய வேண்டும்?

அத். 5: தம்மிடம் பொய் கூறிய மக்களுக்கு தேவன் என்ன செய்தார்?

அத். 6: தேவையில் இருக்கும் மக்களுக்காக சபை என்ன செய்தது?

அத். 7: தலைவர்களை கோபப்படுத்தும் அளவுக்கு ஸ்தேவான் எவ்வாறு இஸ்ரவேலின் வரலாற்றை மீள்பார்வை செய்தான்? அவர்கள் அவனை என்ன செய்தார்கள்?

அத். 8 : பிலிப்பு சமாரியாவில் எவ்வாறு தேவ வேலைகளைத் தொடங்கினான்? அப்போஸ்தலர்களுக்கு சீமோன் எதற்காகப் பணம் கொடுக்க வந்தான்?

அத். 9: கிறிஸ்தவர்களின் மிக மோசமான மனித எதிரியை தேவன் எவ்வாறு மனந்திரும்பச் செய்தார்?

அத். 10-11 : புறஜாதியாரும் தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதை விசுவாசிக்கும் யூதர்களுக்கு தேவன் எவ்வாறு புரிய வைத்தார்?

அத். 12: ஏரோது யாக்கோபுக்கு என்ன செய்தான்? பேதுரு ஏரோதிடம் இருந்து எவ்வாறு தப்பினார்?

அத். 13-14 : தூர இடங்களுக்குப் பவுலை யார் அனுப்பியது? யார் அவரோடு போனார்கள்? அவர்கள் விசுவாசிகளை எவ்வாறு ஒழுங்கு படுத்தினார்கள்?

அத். 15: பழைய யூதப் பிரமாணங்களைக் கைக்கொள்ளாத புறஜாதி விசுவாசிகளை ஏற்றுக்கொள்ள யூதர்களுக்கு தேவன் எவ்வாறு உதவினார்?

அத். 16: ஐரோப்பாவில் உள்ள பிலிப்பியில் முதல் சபை எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது? சிறையதிகாரிக்கு பவுல் என்ன வாக்களித்தார்?

அத். 17: பவுலின் பிரசங்கத்தை வெவ்வேறு விதமாக யூதர்கள் ஏற்றுக் கொண்டனர்.

அத். 18: கொரிந்துவில் பவுல் தன் தேவைகளை எவ்வாறு தானே சந்தித்துக்கொண்டார்? அவனுக்கு வேலை கொடுத்தவர்கள் அப்பொல்லாவுக்கு என்ன செய்தனர்?

அத். 19-20: எபேசுவில் நடந்த பல நிகழ்ச்சிகள். கலகம் ஏன் நிகழ்ந்தது? ஓநாய்களைப் பற்றி பவுல் எச்சரித்தது என்ன?

அத். 21-28 : பவுல் ஏன் எருசலேமில், சிறை பிடிக்கப்பட்டார்? அவரது விசாரணை ரோமாபுரிக்குப் போகும் வழியில் என்ன நடந்தது?

**2. அப்போஸ்தலரின் உதாரணங்களைப் பின்பற்றி அடுத்த வாரம் உங்கள் மந்தை என்ன செய்ய வேண்டும் என்பதைத் திட்டமிடுக.**

- கிறிஸ்துவை அறியாத மக்களிடம் சாட்சிகளாக விசுவாசிகள் போவதற்காகத் திட்டமிடுதல்.
- அப்போஸ்தலர்களைப் போலவே இதை ஜெபத்தோடும் பரிசுத்த ஆவியின் வல்லமையோடும் செய்வதற்கான உதவிகளைத் திட்டமிடுதல்.
- உங்களது "யூதேயா", "சமாரியா", "எருசலேமில்" பணியாற்ற நீண்ட கால திட்டங்களை உருவாக்குதல்

**3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுதல்**

தற்போதைய தேவைகளுக்கும், அந்தந்த வட்டாரப் பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற செயல்பாடுகளைத் தெரிந்தெடுத்தல்.

சாட்சியளிக்க ஆயத்தமாதல். ஆராதனையின் போது இயேசுவுக்காக வல்லமையோடு சாட்சியளிக்க விசுவாசிகளை ஆயத்தம் செய்ய வேண்டும். அப். 1:8 ல் உள்ள இரண்டு விஷயங்களை, நீங்களோ அல்லது ஒரு உதவியாளரோ வாசிக்கும் போது கவனமாகக் கேட்கும்படி கூறுங்கள்.

- முதலாவதாக, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைப் பற்றி பிறருக்குக் கூற யாரிடம் இருந்து வல்லமையைப் பெற்றுக் கொள்ளுகிறோம்.
- இரண்டாவதாக, பரிசுத்த ஆவியின் வல்லமையோடு அப்போஸ்தலர்கள் சென்று சாட்சி அளித்த நான்கு இடங்கள் எவை?
- வாசித்த பிறகு, இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதிலளித்து, மக்கள் அதைக் குறித்து முடியுமானால் பேசட்டும்.

அப்போஸ்தலர்கள் இயேசுவுக்காக சாட்சியளித்த நான்கு இடங்களும் நம்மைப் பொறுத்தவரையில் எவைகளுக்கு இணையானவைகள் (பதில் : பகுதி I - மேலே). பின் உங்களது “யூதேயா” விலும் “சமாரியா” விலும் உள்ள கிறிஸ்துவை அறியாத மக்களுக்காக ஜெபியுங்கள்.

குழந்தைகள் தாங்கள் தயாரித்த நாடகம், கவிதைகள், கேள்விகளை முன் வைக்கட்டும்.

**சேர்ந்து அப். 1:8 ஐ மனனம் செய்க.**

நமது கர்த்தராகிய இயேசுவைப் பற்றி இந்த வாரத்தில் மக்களுக்குக் கூற உடன் ஊழியர்களுடன் நீங்கள் செய்துள்ள திட்டங்களை விளக்கவும். இந்த வேலைக்காக நல்ல முறையில் ஏற்பாடு செய்யவும். யாரை சந்திக்கலாம் என்பது பற்றி விசுவாசிகள் கலந்துரையாடட்டும்.

இயேசுவின் **அடிப்படை கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய** புதிய சீஷர்களுக்கு உதவுவதற்காக ஆயத்தமாகுங்கள். நீங்களோ உங்கள் உதவியாளரோ அப். 2:37-47 ஐ வாசிக்கு முன், எருசலேமில் மனம் மாறிய 3000 பேர் இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதற்காக செய்த விஷயங்களைக் கேட்குமாறு விசுவாசிகளிடம் கூறுங்கள். இயேசுவுக்குக் கீழ்ப்படிவதற்காக பெந்தெகொஸ்தேவைத் தொடர்ந்து, புதிய விசுவாசிகள் செய்த ஏழு காரியங்களை வார்த்தைகள் இன்றி செய்கையின் மூலம் உங்கள் உதவியாளர் செய்து காட்டுவார் என்று விளக்கவும். அந்த விஷயங்கள் என்னவென்று ஊகிக்குமாறு விசுவாசிகளைக் கேட்டுக் கொள்ளவும்.

1) **மனம் திரும்புதல் :** மனம் திரும்புதலை பேசாமலேயே சித்தரிக்க இரண்டு உதவியாளர்களை ஆயத்தப்படுத்தவும்.

- அறையின் ஒரு பக்கத்தில், ஒருவன் சாத்தானைப் போல சீறி, தன்னருகில் வருமாறு மற்றவனை கை காட்டி அழைக்கவும்.
- மற்றவன், யாராவது தன்னைப் பார்க்கிறார்களா என்று அங்கும் இங்கும் பார்த்தவாறே தயங்கித் தயங்கி அவனை நோக்கிச் செல்லுகிறான். ஏறத்தாழ நெருங்கிய பின், நின்று, தன்னுடைய கைகளை இருதயத்தில் வைத்து, ஒரு வினாடி ஜெபிப்பது போல் செய்கிறான். பின் திரும்பி வேறு வழியாகச் செல்லுகிறான்.
- என்ன செய்யப்பட்டது என்று ஊகிக்குமாறு மக்களிடம் கூறுங்கள். மனம் திரும்புதல் என்பது, இருதயத்தில் நமக்கு ஏற்படும் மாற்றம். பாவத்தை நோக்கிப் போகாமல் திரும்பி வேறு திசையில் செல்வது.

2) **ஞானஸ்நானம் :** ஒரு உதவியாளர் மற்றவருக்கு ஞானஸ்நானம் அளிப்பது போல் நடித்தல் (மக்கள் ஊகிக்கட்டும்).

3) **தேவ வார்த்தையைக் கற்று போதித்தல் :** திறந்த வேதாகமத்தை எல்லோரும் பார்க்கும்படி வைத்து, அதில் உள்ள வார்த்தைகளைச் சுட்டிக்காட்டி பிறருக்கு விளக்குவது போல காட்டுதல் (மக்கள் ஊகிக்கட்டும்).

4) **ஐக்கியம் (ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்துதல்).** ஒரு உதவியாளர் இன்னொருவரை அணைத்துக் கொள்ளுதல் அல்லது உங்களது காலாச்சாரத்தின் அன்பைக் காட்ட எது செய்வீர்களோ அவ்வாறு செய்யலாம் (மக்கள் ஊகிக்கட்டும்)

5. **அப்பம் பிட்குதல் (கர்த்தரின் பந்தி)** ஒரு உதவியாளர் மற்றவருக்கு அப்பம் பரிமாறி, புசித்து, கற்பனையாகப் பானம் பண்ணுவது போல் காட்டுதல் (மக்கள் ஊகிக்கட்டும்).

6. **ஜெபம் :** இரண்டு உதவியாளர்கள் ஜெபிப்பது போல செய்தல், மௌனமாக (மக்கள் ஊகிக்கட்டும்).

7. **கொடுத்தல் :** ஒருவர் இன்னொருவரிடம் கொடுப்பது போல பாவித்தல். அவர் நன்றியோடு பெற்றுக் கொள்ளுதல் - அமைதியாக (மக்கள் ஊகிக்கட்டும்).

அப்போஸ்தலர்கள் என்ன செய்தார்கள் என்பதை விளக்கவும். அப்போஸ்தலர் நடபடிகளில் இருந்து ஒரு சில நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்து உங்கள் சபையில் சொல்லவும் அல்லது நடிக்கவும். பிள்ளைகளோடு பெரியோர்களும் சேர்ந்து நடித்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். பின், விசுவாசிகள் என்ன கற்றுக் கொண்டார்கள் என்பதைக் கேட்கவும். இதன் விளைவாக அவர்கள் என்ன செய்ய திட்டமிடுகிறார்கள் என்பதைக் கேட்கவும்.

கர்த்தரின் பந்தியை ஆசரிக்க அப். 20:7 ஐ வாசிக்கவும். அப்போஸ்தலர் நடிபடிகளில் விசுவாசிகள் இயேசு உயிர்த்தெழுந்த நாளான வாரத்தின் முதல்நாள் கர்த்தரின் பந்தியை ஆசரிக்க கூடிவந்தனர்.

**இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களாக கூடி** ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யுங்கள், ஜெபியுங்கள்.

Copyright © 2003 by Paul-Timothy Trainers. May be freely copied.
Download from www.Paul-Timothy.net